DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.401 / 2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திரு. குணசேகரன் |
| Father Name | சுப்பையா |
| Village | பேட்மாநகரம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 44 |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்))**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-11-2025.(நேரம்: 12.51PM )

**முதல்விசாரணை**

1 நான் தற்போது பேட்மாநகரில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

3.அசா 1,2 ஆகியோர்களை எனக்கு தெரியும்

4.இவ்வழக்கின் எதிரியையும் எனக்கு தெரியும்.

5.கடந்த 17.09.2016 ஆம் தேதி மாலை 05.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி முத்துசெல்வன் அசா 1 ன் வீட்டின் முன்பு வைத்து அசா 1 ராஜாவை " தேவடியா மவனே " என்று தகாத வார்த்தையால் அசிங்கமாக ஏசினார்.

6.பின்பு இவ்வழக்கின் எதிரி முத்து செல்வன் கையில் கம்புடன் உன்னை வெட்டி விடுவேன், கொன்று விடுவேன் என்று அசா 1 ஐ மிரட்டினார்.

7.மேற்கண்ட விவரம் நான் நேரில் பார்த்தேன்.

8.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 12.54PM)**

1.புகார்தாரர் ராஜா எனக்கு என்ன உறவுமுறை என்றால் மாமா உறவு முறை ஆகும்.

2.சம்பவம் எனக்கு யார் சொல்லி தெரியும் என்று கேட்டால் நான் அப்போது வீட்டில் இருந்தேன்.

3.சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய காலகட்டத்தில் ராஜா என்ன கட்சியில் என்ன பொறுப்பில் இருந்தார் என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது.

4.எதிரி முத்துசெல்வனுக்கும், எனக்கும் எதாவது உறவுமுறை உள்ளதா என்றால் இல்லை.

5.புகார்தாரர் புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் போகவில்லை.

6.என்னுடைய குவிமுச 161 ஸ்டெட்மெண்டில் எதிரி சாட்சி 1 க்கு எந்த சட்டத்தின் கீழ் மனுசெய்து பணம் வராமல் தடுத்து விடுவேன் என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது.

7.நான் ராஜா மற்றும் இன்னொரு 3 நபர்கள் ஆகியோர் சேர்ந்து அரசிற்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமைத்து வீடு கட்டி கொண்டதை எதிரி எதிர்த்து கேள்வி கேட்டதால் அவர் மீது அசா 1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8.என்னுடைய 161 போலிஸ் விசாரணையின்போது எதிரி குளிக்க செல்லும் பெண்களை பார்த்து கேளி செய்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்லவில்லை.

9.ராஜா வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்டால் 150 மீட்டர் தூரம் இருக்கும்.

10.எதிரி முத்துசெல்வம் பொதுமக்களின் நலனுக்காக அடிகடி போராட்டம் நடத்துவர் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

11.ராஜாவிற்கும் எதிரிக்கும் கட்சி பதவி பெறுவதற்காக 2 பேருக்கும் நடுவே ஒரு பிரச்சணை இருந்தது என்று சொன்னால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

12.என்னுடைய போலிஸ் விசாரணையில் எதிரி பல நபர்களிடம் தான் கட்சியில் இருப்பதாக கூறி பணம் வாங்கி மோசடி செய்ததாக நான் சொல்லியுள்ளது தவறு என சொன்னால் சரியல்ல.

13.போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

14.எனக்கு போலிஸ் துறையில் காவலர்கள், சார்பு ஆய்வாளர், ஆய்வாளர் ஆகியவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடு தெரியுமா என்றால் தெரியும்.

15.ராஜா பிரச்சணைக்குரிய சமயத்தில் வார்டு கவுன்சிலராக இருந்தார் என்றும் பொதுமக்களுக்கு இலவச கழிப்பறை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை முறைகேடு செய்தார் என்றும் அது குறித்து எதிரி முத்து செல்வன் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேள்வி கேட்டதால் அவரை பழிவாங்கும் நோக்கத்தில் கொடுக்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

15.புகாதாரர் ராஜா எனது மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**சாட்சியம் முடிந்த நேரம்** : 01.10PM

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.